www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

12 - ஆம் வகுப்பு

## வரலாறு

பதிவு எண்.

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - அ

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?

அ) 1913 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

அ) பால கங்காத திலகர் - 1) இந்தியாவின் முதல்
ஆ) தாதாபாஸ் தௌரோஜி - 2) மெட்ராஸ் டைம்ஸ்
இ) மெக்காலே - 3) கேசரி
ஈ) வில்லியம் டிக்பை - 4) இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 1, 3, 3, 4 ஈ) 4, 2, 3, 1

3. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?

அ) அரவிந்த கோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) ஃபெரோஸ் ஷா மேத்தா ஈ) லாலா லஜபதி ராய்

4. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் வந்த கூற்று தவறானது?

அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
ஆ) பாரதி திலகரின் Tents of New party என்ற நூலை தமிழில் மொழிபெயர்த்தார்.
இ) பாரதியிந் குரமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தாராவார்.
ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

5. ***கூற்று :*** ஜின்னாவை 'இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்' என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

***காரணம் :*** லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி 'ஜின்னா ஆவார்.

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல .
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்.
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும் மற்றும் காரணம் இரண்டும் தவறு

6. பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம் யாரால் நிறுவப்பட்டது?

அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

7. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?

அ) திலகர் ஆ) கோகலே இ) W.C.பானர்ஜி ஈ) M.G.ரானடே

8. **பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?**

அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1) ரெஜினால்டு டையர்
ஆ) தலித் - பகுஜன் இயக்கம் - 2) டாக்டர் அம்பேத்கார்
இ) சுயமரியாதை இயக்கம் - 3) ஈ.வெ.ரா பெரியார்
ஈ) சத்தியாகிரக சபை - 4) ரௌலட் சட்டம்



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

9. கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?

அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன்

ஆ) வங்காள சபை இ) இந்தியக் குடியரசு இராணுவம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

10. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது

அ) மதராஸ் – அரக்கோணம் ஆ) பம்பாய் – பூனா

இ) பம்பாய் – தானே ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

## பகுதி – II

**குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. தேசியம் என்றால் என்ன?

12. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' (The Medicant Policy) என்றால் என்ன?

13. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனி அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?

14. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.

15. இந்தியப் பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?

16. பி.ஆர்.அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?

17. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?

## பகுதி – III

**குறிப்பு : ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 3 = 15

18. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித் குறிப்புகளை' ஆய்க.

19. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

20. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநானால் கொல்லப்பட்டார்?

21. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.

22. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.

23. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியா சென் எவ்வாறு திட்டமிட்டார்?

24. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.

## பகுதி – IV

**குறித்து : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 X 5 = 15

25. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. ***(அல்லது)*** ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகள் நடைபெற்ற பின்வரும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.

1) சென்னை 2) அகமாபாத் 3) கான்பூர் 4) சூரத் 5) பூனா

26. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக. ***(அல்லது)***

ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

27. அ) காந்தியடிகளின் சகாப்தம் குறித்து நிகழ்வுகளின் காலக்கோடு ஒன்றை உருவாக்கவும். (1917-1947). ***(அல்லது)*** ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com